பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5.00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 15 வியாழக்கிழமை (28-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 62

# சமஷ்டி திட்டத்தை முன்வைத்த பின் தாக்குதலை அரசு தீவிரப்படுத்தும்!

### காயம்

வலலாய்ப் பகுதியில் இருந்து நேற்றுக்காலை படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி அச்சுவேலி வடக்கு, மடத்தடியில் இளம்பெண் ஒருவர் காயமடைந்தார்.

காயமடைந்த இ. சுஜாதா (வயது 2 ) என்ற இந்தப் பெண் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## மக்களையும் புலிகளையும் பிரிக்க புதிய சூழ்ச்சி இது

### கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விளக்கம்



யாழ்ப்பாணம், ஜனவரி 28

நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் சமஷ்டி என்ற பெயரில் யோசனை ஒன்றை முன்வைத்து உலகை ஏய்த்துவிட்டு, இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டிருக்கிறது.

சமஷ்டித் தீர்வு என்ற யோசனை மூலம் தமிழ் மக்களைக் குழப்பி, விடுதலைப் புலிகளிடமிருந்து அவர்களை அந்நியப்படுத்தவும் ஸ்ரீலங்கா அரசு சூழ்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது

— இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்.

நேற்று கைலாசபதி கலையரங்கில் கலை, இலக்கிய, பத்திரிகையாளர் நடத்திய தளபதி கிட்டு அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை நிலைமை குறித்து அவர் கூறியதாவது:-

எங்களுக்குக் கிடைத்த தகவல்களின் படியு —

இலங்கை அரசின் அணுகுமுறையை உற்று நோக்கி அவதானிப்பதன் மூலமும் ஒரு விடயம் விளங்குகிறது.

இலங்கை அரசு நாடாளுமன்றத் தெரிவிக் குழு மூலம் இறுதியாக ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்கவிருக்கிறது.

இந்த யோசனையில் முக்கியமானது சமஷ்டிக் கோட்பாடு. இந்தக் கோட்பாட்டை முன்வைத்து உலக நாடுகளை ஏய்க்க அரசு முனைகிறது. தமிழர்களுக்கு சமஷ்டி கொடுத்துள்ளோம் என்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இந்தியாவால் போராட்டம் பின்னடைவு

நேற்று கிட்டு அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கலாநிதி பாலசிங்கம் மேலும் கூறியதாவது:-

எமது விடுதலைப் போராட்டம் நீண்ட முடிவில்லாத கதையாக தொடர்ந்து செல்கிறது. இன்று சிக்கல் நிறைந்த, நிச்சயமற்ற தன்மை தொனிக்கிறது.

மாறிமாறி வரும் பேரிழப்புக்கள், பேரழிவுகள்; இப்படியாக எமது போராட்டத்தில் இடையிடையே — காலத்துக்கு காலம் — சில பின்னடைவுகளும் ஏற்படுவது உண்டு.

இந்த நிச்சயமற்ற தன்மைக்கும், பின்னடைவுகளுக்கும் காரணகர்த்தாவாக இந்திய அரசு விளங்குகிறது.

### இந்தியத் தலையீடு தொடர்கிறது

'இந்தியத் தலையீடு கடந்த 10 வருடங்களாக இருந்து வருகிறது. 1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தை அடுத்து தொடங்கிய இந்தத் தலையீடு பல்வேறு நிலைகளில் பல்வேறு வடிவங்களில் இன்று தொடர்ந்து வருகிறது.

இந்தியா எமது பிரச்சினையிலிருந்து விலகி ஒதுங்கி நிற்பதாக கருதுவது தவறு. வித்தியாசமான முறையில் இந்த தலையீடு இருக்கிறது.

கிட்டுவின் வீரமரணம் இந்தியாவின் தொடர்ச்சியான தலையீட்டின் ஓர் உச்சக் கட்டம்—

### தன் நலனே இந்தியாவின் நோக்கு

இந்தியாவும் தனது தேசிய, பூகோள நலன்களை கருத்தில் கொண்டுதான் எமது பிரச்சினையை அணுகியது.

தமிழீழ மக்களின் பாதுகாவலன்; தமிழீழ மக்களின் இரட்சகன்; தமிழர்களுக்கு விடிவு கொடுக்க வந்தவன்! — இப்படியெல்லாம் பாசாங்கு காட்டி நடித்து இராஜதந்திரக் காய்களை நகர்த்தி, எத்தனையோ வகையில் தலையிட்டது. பல வகைகளில் வியாக்கியானம் அளிக்கமுற்பட்டாலும், அடிப்படையில் இந்தியா தனது நலனை முன்வைத்தே செயல்பட்டது. இதுதான் உண்மை.

### தமிழீழப் போராளிகளைக் கொண்டு ஜே. ஆருக்கு பாடம் புகட்ட முயற்சி

1980 களுக்கு முன் ஆட்சியிலிருந்த ஜெயவர்த்தனா அரசு அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளை நாடி நின்றது. இங்கு கிளர்ந்தெழுந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு மேற்குலகை நாடியது.

இந்திய வல்லாதிக்கத்தை அசட்டை செய்து, இந்தியாவின் உதவியை நாடாது ஜே. ஆர். செயற்பட்டது அப்போதைய இந்தியப் பிரதமரான இந்திராவுக்கு ஆத்திரத்தை ஊட்டியது.

தமிழீழ விடுதலைப் போராளிகளைக் கொண்டு ஜே. ஆருக்குப் பாடம் புகட்ட இந்திரா திட்டமிட்டார்.

சிங்கள அரசை ஆட்டம் காணச் செய்து தனது காலடியில் விழவைக்கும் தந்திரோபாயமாக —இடைக்கால உத்தியாக போராளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

### பகடைக் காய்களாகப் போராளிகள்

இலங்கையில் தனது ஆதிக்கத்தை கொண்டு வருவதற்காக தமிழீழ விடுதலைப் போராளிகளை இந்தியா பகடைக்காய்களாக பயன்படுத்தியது. இதுதான் உண்மை.

எமக்கெல்லாம் ஆயுத உதவி வழங்கப்பட்டது; பயிற்சியும் தரப்பட்டது. இன்று இது உலகறிந்த உண்மை.

உண்மையில் தமிழ் மக்களுக்கு நீதிவழங்க வேண்டும் என்ற சிந்தனையில் இந்த உதவி வழங்கப்படவில்லை.

அன்றையகாலத்தில் இருந்து விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும் தனித்து நின்று போராடி, ஒரு பலம் வாய்ந்த சக்தியாக படிமுறை வளர்ச்சியில் வளர்ந்து கொண்டு வருகிறது.

அந்த நேரத்தில் — உண்மையாக தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இந்தியா அக்கறை கொண்டிருந்தால் — ஒரு போராட்ட அமைப்பை, மக்களின் ஆதரவு பெற்ற ஒரு போராட்ட அமைப்பை கட்டி வளர்த்திருக்கலாம். இந்தியா அப்படிச் செய்யவில்லை.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ விடுதலைப் போர் தோல்வியில் முடிவடையாது

### அமைச்சர் தொண்டா தலைவர் பிரபாவுக்கு கடிதம

யாழ்ப்பாணம், ஜன. 28

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் திட்டம் தோல்வியில் முடிவடைந்தாலும் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம் தோல்வியில் முடிவடை



யப் போவதில்லை. உலகம் வியக்கும் சாதனைகளை தமிழீழ மக்கள் படைத்துத்தான் ஆவார்கள்.

— இவ்வாறு அமைச்சர் தொண்டமான் சில தினங்களுக்கு முன்னர் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

இக்கடிதம் பற்றிய விவரத்தை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் கலை இலக்கிய, பத்திரிகையாளர் நடத்திய நிகழ்ச்சியில் உரையாற்றும் போது வெளியிட்டார். இக் கடிதம் குறித்து கலாநிதி பாலசிங்கம் தெரிவித்ததாவது:-

சில தினங்களுக்கு முன்னர் அமைச்சர் தொண்டமான் தலைவர் பிரபாகரனுக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்தில் —

நாடாளுமன்றத் தெரிவுக் குழு தோல்வியில் முடிவடைந்துவிட்டது. இந்தத் தெரிவுக்குழு கொண்டுவரப்



போகும் திட்டம் ஏற்றுக் கொள்ளமுடியாதது. அது தமிழ்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கலை, இலக்கிய, பத்திரிகையாளர் இந்தியாவைக் கண்டித்துப் பேரணி

### தளபதி கிட்டுவுக்கு அஞ்சலியும் செலுத்தினர்

யாழ்ப்பாணம், ஜன. 28

தளபதி கேணல் கிட்டுவும் மற்றும் ஒன்பது போராளிகளும் வங்கக் கடலில் வீரச்சாவடையச் சதி செய்த இந்திய மேலாதிக்கத்திற்கு எதிர்ப்புக் குரல் கொடுக்கும் வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த கலைஞர்கள், இலக்கிய கர்த்தாக்கள் பத்திரிகையாளர்கள் நேற்றுக் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தினர்.

நேற்றுப் பிற்பகல் சுமர் 2-30 மணிக்கு நாச்சிமார் கோவிலில் இருந்து புறப்பட்ட இப்பேரணியில் 14 அமைப்புகளைச் சேர்ந்த பெருந்எண்ணிக்கையான கலைஞர்கள், இலக்கிய கர்த்தாக்கள், இலக்கிய ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் பங்குபற்றினர்.

இந்திய அரசின் செயலைக் கண்டிக்கும் கோஷங்கள் பேரணியின் போது எழுப்பப்பட்டன. கண்டனக் கவிதைகளும் ஒலிபரப்பப்பட்டன. தளபதி

(ப ஆம் பக்கம் பார்க்க)

### 'தடா' சட்டத்தின் கீழ் நெடுமாறன் கைது!

சென்னை, ஜன. 28

குடியரசு தினத்துக்கு முந்திய தினம் தமிழ் நாட்டில் இடம்பெற்ற மூன்று குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் ப. நெடுமாறன் நேற்று மதுரையில் வைத்து ''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை அவர் சென்னையில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

திரு. நெடுமாறன், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக அண்மையில் சென்னையில் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தார் என்று இந்திய வானொலி அறிவித்தது.

### சுவிஸ் பிரஜை கைது!

மணிலா ஜன 28

விடுதலைப் புலிகளுக்கு இரகசியத் தகவல்களைக் கொண்டு வந்ததாகக் கூறப்படும் சுவிஸ் பிரஜை ஒருவரை பொலீஸார் கைது செய்ததாகக் கொழும்புப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது.

புலிகளுக்கு ஆயுதம் விநியோகிக்கும் விடயத்தில் இவர் தொடர்புடையவர் என்றும்—

வடக்கிலுள்ள காட்டுப்பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது அவர் கைது செய்யப்பட்டதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

புலிகள் இயக்கத்திற்கு ஆயுதக் கொள்வனவு செய்வதற்கான நிதியைத் திரட்டுவதற்காக ஐரோப்பிய நாடு ஒன்றில் நடத்தப்பட்ட கண்காட்சி ஒன்றின் படங்களை அவர் வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-6)

### ஆஸ்திரியத் தலைநகரில் 5 இலங்கையர் மரணம்

ஆஸ்திரியத் தலைநகர் வியென்னாவுக்குத் தெற்கே தரிப்பு நிலையம் ஒன்றில் ஐந்து இலங்கையர் இறந்து கிடக்கக் காணப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அவர்கள் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் மறைத்துக் கூட்டிவரப்பட்டனர் என்றும் —

அவர்கள் மறைத்துக் கூட்டி வந்த வாகனங்களில் போதிய காற்றோட்டம் இல்லாததால் அவர்கள் மூச்சுத் திணறி இறந்திருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவித்தனர்.

இறந்த இலங்கையர் 19 முதல் 35 வரை வயதுடையவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-க)

## கிழக்கில் அதிரடி! 8 ஊர்காவலர் பலி!!

யாழ்ப்பாணம், ஜன. 28

கிழக்கில் விடுதலைப் புலிகள் முஸ்லிம் ஊர்காவல் படையினர் மீது நடத்திய தாக்குதலில் 8 ஊர்காவலர் கொல்லப்பட்டனர்.

இந்திய வானொலி செய்தியை மேற்கோள் காட்டி புலிகளின் குரல் இத் தகவலை வெளியிட்டது.

தானியங்கித் துப்பாக்கிகளு

(2 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நமசிவாய

# 31ஆம் நாள் நினைவு ஆத்மசாந்தியும் மோட்ச அபிஷேக ஆராதனையும்



செல்வி

## விஜிதா இராசரத்தினம்

(விஜி)

[மாணவி, இராமநாதன் கல்லூரி,
க. பொ. த. (உயர்தரம்) வர்த்தகப் பிரிவு]

வையத்துள்: 26 — 06 — 1973
தெய்வத்துள்: 29 — 12 — 1992

திதி: பூர்வபட்ஷ ஷஷ்டி

கடந்த 29 - 12 - 1992 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது ஏக புதல்வியும், அருமைத் தங்கையுமாகிய செல்வி விஜிதா இராசரத்தினம் அவர்களது வீட்டுக் கிருத்தியம் இன்று வியாழக்கிழமை சுன்னாகம் தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் காலை 10-30 மணியளவில் சுன்னாகம் சுகிரமலைச் சிவன் தேவஸ்தானத்தில் அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி மோட்ச அபிஷேகமும், ஆராதனையும், மகேஸ்வர பூசையும் நடைபெறும்

அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்னாரது ஆத்ம சாந்தி ஆராதனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை — பொ. இராசரத்தினம்,
தாய் — இ. சிதம்பரேஸ்வரி,
சகோதரன் — இ. தயாபரன்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (5499)

---

உ
ஓம்விராட் விஸ்வப் பிரம்மனே நம:

# ஓராண்டு நினைவஞ்சலி

தரிசனம்: 25 — 02 — 1943

நிர்வாணம்: 09 — 02 — 1992



விஸ்வகர்மத்திலகர்

அமரர்

## முத்துத்தம்பி இரத்தினவேலு

(சந்தனம்)

திதி: 28 - 01 - 1993

ஆலமரமாம் நீ சாய்ந்து இன்று
ஆண்டொன்று ஆனதே - நின்
கோல நிழலில் குலவிய நாம்
வேண்டுவதுன் ஆத்ம சாந்தி!

மனைவி, மக்கள், மருமகன்.

'நாகேஸ்வரி இல்லம்',
தேவாலய ஒழுங்கை,
சுழிபுரம் ஆனைக்கோட்டை. [24232

---

யாழ்ப்பாண இந்துக் கல்லூரி

# மைதான விரிவாக்கம்

எமது சங்கத்தினால் நடாத்தப்பட்ட மேற்படி திட்டத்திற்கான நிதி சேகரிக்கும் பரிசுச்சீட்டிழுப்பு 31 - 01 - 1993 மாலை 4-00 மணிக்கு எமது கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலர்
பழைய மாணவர் சங்கம்,
யாழ் இந்துக் கல்லூரி.
(சி/4301)

---

# வாழ்த்துகின்றோம்!

கடந்த 1992 ஆகஸ்ட் மாத உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்திகள் (A) பெற்ற-

**தாமோதரம்பிள்ளை சுதா**
(யாழ். வேம்படி மகளிர் கல்லூரி)

அவர்களையும் பின்வரும் மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- ★ வேலுப்பிள்ளை கலைச்செல்வன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) — 2A, 2B
- ★ பாலசிங்கம் பகீரதன் (யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி — 2A 2B
- ★ இராசையா ரேணுகா (சாவ. இந்துக் கல்லூரி) — 2A, 2B
- ★ T. மஞ்சுளா (சாவ. இந்துக் கல்லூரி) — 2A, 2B
- ★ இராஜதுரை சுதர்சினி (சாவ. இந்துக் கல்லூரி) — A, 3B
- ★ தர்மலிங்கம் சுமங்கலா (சாவ. இந்துக் கல்லூரி) — A, 3B
- ★ சுப்பிரமணியம் கவிதா (சாவ. இந்துக் கல்லூரி) — A, 3B

இவர்களின் கல்விக்கு வித்திட்ட கல்லூரிகளுக்கும், இம் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு அயராது உழைத்த எமது நிறுவன ஆசிரியர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்

அதேவேளையில், 1991 உயர்தரப் பரீட்சையில் 4 A பெறுபேறு பெற்ற பகீரதன் எனும் எமது மாணவரையும் வாழ்த்துகின்றோம்.

சிவாகி கல்வி நிறுவனம்,
சாவகச்சேரி.

---

# சிவாகி - சாவகச்சேரி.

A/L - 1992 பரீட்சை முடிவுகள் கிடைத்த மாணவருக்கான

## மீட்டல் வினா-விடை வகுப்பு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | க. கலாகரன் |
| கணக்கியல் | — | S. K. பிரபாகரன் |
| வர்த்தகம் | — | R. ரகுநாதன் |
| இந்துநாகரிகம் | — | கமலநாதன் |
| அளவையியல் | — | A. பிரபாகரன் |
| புவியியல் | — | நித்தி |

ஆரம்பமாகிவிட்டது!

(சி-4373)

---

யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை.

யாழ்ப்பாணக்கல்லூரியின் விஞ்ஞான பீட விரிவுரைகள் 29-01-1993 பிற்பகல் 3-30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

பேராதனைப் பல்கலைக்கழகம்

## FIRST IN SCIENCE

(G. S. Q -விஞ்ஞானமாணித் தகுதிகாண் பாடநெறிகள்)

பாடநெறிகள்:

**Group - I (G. S. Q.)**
Applied Mathematics (பிரயோக கணிதம்)
Pure Mathematics (தூய கணிதம்)
Geography (புவியியல்

**Group - II (G. S. Q.)**
Applied Mathematics (பிரயோக கணிதம்)
Pure Mathematics (தூய கணிதம்)
Statistics (புள்ளிவிவரவியல்)

**Group - III (G. A. Q.)**
Applied Mathematics (பிரயோக கணிதம்)
Pure Mathematics (தூய கணிதம்
Economics (பொருளியல்)

- ★ க. பொ. த. உ. த.) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம் — பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் Group-III க்கு விண்ணப்பிக்கலாம்.
- ★ பீடத்திலிருந்து பெறப்படும் விண்ணப்பப்பத்திரத்திலேயே விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கலாம்.
- ★ மேலதிக விபரங்களுக்குப் பின்வரும் முகவரியில் பதிவாளருடன் தொடர்பு கொள்ளவும்.
- ★ பதிவாளரைச் சந்திக்கும் நேரம் 29-01-1993 வெள்ளிக்கிழமை முற்பகல் 9 00 மணி முதல் 12-00 மணி வரை.

முகவரி:
பதிவாளர்,
"திருமறை இல்லம்",
182, [illegible] யாழ்ப்பாணம்.
[சி-4277]

---

கிழக்கில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

டன் சென்ற விடுதலைப் புலிகள் பாலமுனை என்ற கிராமத்தில் ரோந்து செல்லும் ஊர்காவலர் மீது தாக்குதல் நடத்தினர் என்றும் —

எட்டு ஊர்காவலர் அந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட அவர்களிடமிருந்த ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர் என்றும் —

கொழும்பு பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்ததாக தெரிவிக்கப்பட்டது (உ-5)

---

# இன்று கொடுப்பனவு

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம் பெறுவோருக்கு ஜனவரி மாத ஓய்வூதியக் கொடுப்பனவு இன்று காலை 9 மணி முதல் 10 மணி வரை வழக்கம்பரையில் உள்ள தற்காலிக கிராமிய வங்கி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

(உ)

---

# காணவில்லை



## திரு. வல்லிபுரம் அமிர்தலிங்கம்

சுன்னாகத்தில் பிறந்தவரும், இளையாணன் உடுப்பிட்டியில் வசிப்பவரும் ஆகிய திரு. வல்லிபுரம் அமிர்தலிங்கம் அவர்களை 18-12-1992 இலிருந்து காணவில்லை. இவர் மனநோயாளி, சாதாரண உயரம், மெலிவான தேகம், கறுப்பு நிறம். இவரைப்பற்றிய விபரம் அறிந்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்திற்குத் தகவல் கொடுக்கவும்.

திருமதி அ. அமிர்தலிங்கம்,
இளையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

(5756)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## O/L பிரிவு 2 DAY CLASSES

செவ். வியா. — 8 மணி-மாலை 2மணி வரை
சனி, ஞாயிறு — 8 மணி-பகல் 12மணி வரை

ஆரம்பம்: 04 - 02 - 1993
8 மணி

- ★ எமது வழமையான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு
- ★ கணித, விஞ்ஞான பாடங்கள் வாரத்தில் 4மணித்தியாலம் நடைபெறும்.

(சி-4317)

---

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 27 — 01 — 1930

அமரத்துவம்: 31 — 01 — 1990



அமரர்

## கந்தப்பிள்ளை பராசசிங்கம்

(இளைப்பாறிய பிரதம புகையிரத பாதுகாப்பு அதிகாரி)

திதி: 28 — 01 — 1993

எமை வாழ்வாங்கு வாழ வைத்த
ஒளி விளக்கைப் போற்றுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கொக்குவில் கிழக்கு. (24238)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவுக்கு பிரதமர்

கொழும்பு, ஜன. 28

பிரதமர் டி பி விஜேதுங்க எதிர்வரும் முதலாம் திகதி வவுனியாவுக்கு விஜயம் செய்ய வுள்ளார் என்று தெரிவிக்கப் படுகிறது. (ஒ-3)

## சம்பளம் முன்கூட்டியே கிடைக்கும்

கொழும்பு, ஜன. 28

அரச ஊழியர்களுக்கான மார்ச், ஏப்ரல் மாதச் சம் பளங்கள் முன்கூட்டியே வழங் கப்படவிருக்கின்றன.

ரம்ழான் பண்டிகையை ஒட்டி மார்ச் மாதச் சம் பளத்தை மார்ச் 18ஆம் திகதி யும்—

சித்திரை புதுவருடத்தை ஒட்டி ஏப்ரல் மாதச் சம் பளத்தை 8ஆம் திகதியும்— வழங்குமாறு பிரதமர் அறிவித் துள்ளார். (ஒ-3)


## TYPING

வகுப்புகள்

தமிழ், ஆங்கில Typing வகுப்புகள் நடைபெறு கின்றன.

விசேட வகுப்புகள்

சனி, ஞாயிறு தினங் களில் தமிழ், ஆங்கில Typing வகுப்புகள் தொழில் பார்ப்பவர் களுக்காக ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

**FUDO ENTERPRISES**

(Fudo office Machines Co
39/17, power House Rd,
3rd, Lane, Jaffna.

(சி-4375)



## புதிய உயர் கல்லூரி

(New College of High Studies)

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**A/L 92**

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான

மீட்டல் வகுப்புக்கள்

ஆரம்பம்:

**28-01-1993**

(வியாழன்)

- ★ பொருளியல் — குமாரவேலு
- ★ கணக்கியல் — SAM
- ★ வர்த்தகம் — பசில்
- ★ அளவையியல் — சோதி
- ★ அரசியல் — பியூபேட்
- ★ புவியியல் — சன்
- ★ வரலாறு — நாகராணி
- ★ தமிழ் — குழந்தை
- ★ இந்துநாகரிகம் } — இந்துசமயம் } அருள்நங்கை

(சி-4352)



## கலை, வர்த்தகக் கல்லூரி

C.C.A

(வெலிங்டன் சந்திக்கு அருகில்)

யாழ்ப்பாணம்.

1992 க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான துரித

மீட்டல் வினா — விடை வகுப்பு

ஆரம்பம்: 30 - 01 - 93

பிற்பகல் 1 - 00 மணி

வர்த்தகம்- இ. இரட்ணம்

குறிப்பு:
சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களில் மட்டுமே வகுப்பு நடைபெறும்.

[சி/4374] - நிர்வாகி.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 18 — 10 — 1928 | 29 — 12 — 1992 |

### திருமதி மேரி மக்டலீன் திருஞானம்

'சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்'

எங்கள் குடும்ப விளக்காக இருந்து, எம்மை சீர் பெற்று வாழ வழி சமைத்த அன்புத் தெய்வமே! உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சு கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு, பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது இதய பூர்வ நன்றிகள்.

இவரது இழப்பால் துயருறும்;
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

38, கோவில் வீதி ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் (24170)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 21 — 10 — 1960 | 21 — 01 — 1991 |

### நடராஜா ரஞ்சிற் கணேசகுமார்

(கலால் பரிசோதகர் - Excise Inspector)

அன்புக் கணவரே! இல்லறத்தில் பல காலங்கள் சேர்ந்து வாழ்வோம் என்று கனவு கண்டேன். ஆனால் நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்றை நினைத்து உங்களை என்னிடமிருந்து பிரித்து விட்டார் உங்களது அழகிய அன்பு முகத்தை என்று காண்பேன். ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும், உங்கள் அழகிய அன்பு முகம் என் நெஞ்சை விட்டு அகலாது ஆறாத்துயரில் என்னை ஆழ்த்திவிட்டுச் சென்ற அன்பரே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிடுவேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அப்பா, அம்மா,
மனைவி - மாலா.

''தங்கஸ்தான்'',
இருபாலை. (24214)


எழுதுவினைஞர் சேவைப் பரீட்சைக்கானது!

## அஷ்டலக்ஷ்மி பொது அறிவு

அனுபந்தத்துடன் ரூபா 60/-

3,000க்கு மேற்பட்ட பொது அறிவுகள் அமைந்துள் ளன. பாலர் வகுப்பு, முதலாம் ஆண்டுக்கான அஷ்ட லக்ஷ்மி A B C Book ஆங்கில புத்தகமும் (அரிச்சுவடி) கிடைக்கும்.

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

(24212)



## கலை, வர்த்தகக் கல்லூரி

C.C.A.

வெலிங்டன் சந்திக்கு அருகில்,
யாழ்ப்பாணம்.

## DAY CLASSES

துரித மீட்டல் வினா-விடை

AL - 92 பரீட்சை முடிவு கிடைத்த பாடசாலை செல்லாத மாணவர்களுக்கான

பகல் நேர வகுப்புகள்

ஆரம்பம்: 02 — 02 — 1993

எமது வழமையான ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| பொருளியல் | ... திரு. உதயன் |
| கணக்கியல் | ... திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | ... திரு. குகன் |
| அளவையியல் | ... திரு. சயந்தன் |
| இந்துநாகரிகம் | ... திரு. ஜோதீஸ்வரன் |
| தமிழ் | ... திரு. தங்கராசா |
| புவியியல் | ... திரு. வேலாயுதபிள்ளை |
| அரசியல் | ... திரு. பஞ்சாட்சரம் |

குறிப்பு:

★ செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு நான்கு நாட்கள் வகுப்புகள் நடைபெறும்.

★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன்கூட் டியே அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.

- நிர்வாகி.

(சி-4366)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 23 — 07 — 1936 | 29 — 12 — 1992 |

### திருமதி சி. புவனசுந்தரி

அன்புத் தாயே! எங்கள் தெய்வமே! நீங்கள் எங் களை விட்டுப் பிரிந்து முப்பத்தோர் நாட்கள் ஆனா லும், உங்கள் அன்பு தவழும் முகமும், சிரிப்பும் எம் நெஞ்சில் எப்பொழுதும் நிற்குதம்மா! அம்மா கோழி தன் குஞ்சுகளை இறகிற்குள் வைத்திருப்பதைப் போல் எங்களை உங்கள் நிழலில் வைத்திருந்தீர்களே! இன்று எங்களை யார் நிழலில் விட்டுச் சென்றீர்கள்! அம்மா நீங்களாக எங்களை விட்டுச் சென்றிருக்கமாட்டீர் கள்! அந்தக் காலன்தான் எங்களிடமிருந்து உங்களைப் பறித்து விட்டான். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிடுவோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மகன்மார், பேர்த்தி.

''தங்கஸ்தான்'',
இருபாலை. (24215)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாலர் வகுப்பு முதலாம் ஆண்டுக்கான அஷ்டலக்ஷ்மி ABC Book, எழுதுவினைஞர் மற்றும் பரீட்சைகளுக்கான பொது அறிவு (இரண்டு நூல்கள்) ரூபா 60/- எங்கும் கிடைக்கும். ஸ்ரீசுப்பிரமணியம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (5746)

ஒன்றரை வயது Dobber Manpincher பெண் நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பாலா, இல. 18, றக்கா வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (24227)

இறைச்சிக் கோழிகள் (புறொயிலர் அல்ல) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: கிளி படப்பிடிப்பாளர்கள், இல. 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி யாழ்ப்பாணம். (24234)

மூளாய்ப் பகுதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 879, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (5754)

## இலவச திருமண சேவை

31 வயது, சுவாதி, செவ்வாய் 4, ஜேர்மனியில் தொழில் புரிபவர் வீஸாவுடன் யாழ் வந்துள்ளார் பெண்ணை அழைத்துச் செல்வார். ஏற்ற மணப் பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். நேரடித் தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (24243)

## சோதிடம்

உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஜாதகம், கைரேகை, எண்சோதிடம் அங்க லட்சணம் என்பனவற்றின் மூலம் பதில் அளிககப்படும். தினமும் காலை 8-30 முதல் 12-00 வரை, பிற்பகல் 3-00 முதல் 6-00 வரை. த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384. கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (24180)

## மணமக்கள் தேவை

32 வயது, இந்து. மணமகன் விஞ்ஞானப் பட்டதாரி உதவி ஆசிரியருக்கு, ஆசிரியை அல்லது தொழில்புரியும் மணமகளும், 28 வயது ஆசிரியை சகோதரிக்கு வடபகுதியில் தொழில்புரியும் மணமகனும் தேவை. மணமகள் யாழ். மாவட்டத்தில் கடமைபுரிபவராய் இருப்பதுடன் சைவ போசனம் விரும்பத்தக்கது. இல. 486 மே/பா உதயன், யாழ்ப்பாணம் (24195)

## வாடகைக்குத் தேவை

ஓவிய வகுப்புகள், ஓவிய கூடம் நிறுவுவதற்கு ஏற்ற வீடு வாடகைக்குத் தேவை யாழ் நகர சுற்றாடலில் விரும்புகிறோம். தொடர்பு: இல 202, கோவில் வீதி (கைலாசபிள்ளையார்கோவில் முன்பாக), நல்லூர் (24225)

ஸ்ரூடியோ அமைப்பதற்கு ஏற்ற வீடு வாடகைக்குத் தேவை. நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி பகுதிகள் விரும்பப்படும். தொடர்பு: இல. 202, கோவில் வீதி (கைலாசபிள்ளையார்கோவில் முன்பாக), நல்லூர் (24224)

சிறிய அல்லது பெரிய தனி வீடு சுன்னாகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே (K.K.S. வீதிக்கு அண்மிய பகுதியில் விரும்பத்தக்கது) தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்: இல. 877, மே/பா உதயன். (5751)

## மணமகன் தேவை

கேட்டை நட்சத்திரத்தில் 6ஆம் எண்ணில் பிறந்த, 37 வயது நிரம்பிய மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. உள்ளூரில் வேலை பார்ப்பவர் விரும்பத்தக்கது. விவரங்களுடன் விண்ணப்பிக்கவும் இல. 878, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-4365)

இந்து, கேட்டை நட்சத்திரம் உடைய 36 வயது மணமகளுக்கு அரசாங்க அல்லது தனியார் நிறுவனங்களில் தொழில் புரியும் அல்லது வியாபாரத் துறையில் உள்ள (படித்த) மணமகன் தேவை. தகுந்த சீதனம் கொடுக்கப்படும் முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும் இல 488, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-4297)

## ஞானச்சுடர்

ஆசிரியர் கோவை ஹரனை ஆசிரியராகக் கொண்டு கோப்பாய் முத்துமாரி பதிப்பகத்தாரால் வெளியிடப்படும் ஞானச்சுடர் வெளிவந்துள்ளது பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம் தனிப்பிரதி ரூபா 30/-. வருடச்சந்தா ரூபா 325/- விற்பனையாளர்களுக்கு விசேட கழிவு உண்டு. முத்துமாரி பதிப்பகம் கோப்பாய் (24233)

## WANTED

Wanted an English Typist for Part Time work Apply in Person Please S Vanniasingam, Palaly Road, Thirunelvely North Jaffna. (5755)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

## 92 கலை, வர்த்தகம்

சனி, ஞாயிறு மீட்டல்

**ஆரம்பம்: 30-01-1993**

8-00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்து நாகரிகம் | — | திரு. காரை |
| இந்து சமயம் | — | சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குமாரசாமி |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறீதரன் |

பிரத்தியேக கணக்கியல் மீட்டல்

திரு. S K. பிரபாகரன் (2-00—5-00 மணி)

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும். (சி-4196)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 08 — 07 — 1955



உதிர்வு: 24 — 01 — 1988

திருமதி
காயத்திரி ஆனந்தரமணி தர்மசோதி
(விஞ்ஞான ஆசிரியை, ம/காக்கையன்குளம் மகா வித்தியாலயம்)

திதி: 28 — 01 — 1993
(வியாழக்கிழமை)

ஆண்டு ஐந்து மறைந்ததம்மா!
ஆறுமோ எம்மனம் ஆறாதம்மா!!

தங்கள் பிரிவால் தவிவுறும்:
கணவன், பிள்ளைகள், பெற்றோர்,
சகோதரி, சகோதரர்கள், மைத்துனர்கள்,
மைத்துனிகள் மற்றும் உன் அன்பால்
ஈர்க்கப்பட்ட உறவினர்கள், நண்பர்கள்.

ஸ்ரீசாலினி,
காங்கேசன்துறை வீதி,
இணுவில். (24129)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு: 16 — 05 — 1910



உதிர்வு: 29 — 12 — 1992

## அமரர் தில்லையம்பலம் சுப்பையா

எமக்கெனவே வாழ்ந்து, எமக்கு சிறந்த வாழ்வு தந்து எம்மை மீளாத் துயரில் விட்டுச் சென்றதேன்? எனப் பொழுதில் காலதேவன் உங்களைக் கவர்ந்து சென்றதேனோ?

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம் இதயங்களில் என்றும் பிரகாசித்துக் கொண்டே இருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம். 29 - 12 - 1992இல் நடைபெற்ற அன்னாரின் ஈமக்கிரியைகளை முன்னின்று நடத்திய உறவினர். நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று 28 - 01 - 1993) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மகிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

14/2, பிளச்சஸ் லேன்,
(கண்டிக்குளி மகளிர் கல்லூரி அருகில்)
யாழ்ப்பாணம். (24168)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி சிவக்கொழுந்து கனகசபை
(பர்வதம்)

தோற்றம்: 25 - 01 - 1927 — சிவபதம்: 01 - 01 - 1993

எனது அன்புத் துணைவியாரின் பிரிவு கேட்டு எம் இல்லம்தனை வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், சகல வகையிலும் பேருதவி புரிந்த அயலவர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

29 - 01 - 93 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் 31 - 01 - 1993 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர் - பொ. கனகசபையும்,
பிள்ளைகளும், உறவினர்களும்.

58 A, பிரப்பங்குள ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (24241)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# தமிழர் பக்கமே வெற்றிவேண்டும்!

பல்கலைக்கழக அனுமதி சம்பந்தமாகத் தமிழ் மாண வர்கள் சார்பில் தொடரப்பட்ட வழக்கை வாபஸ்பெறச் செய்வ தற்கான தீவிர முயற்சிகளில் அரச தரப்பினர் ஈடுபட்டிருப்ப தாகச் செய்திகள் வெளிவந் துள்ளன.

தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுவிட்டதாகவும் அதற்கு நிவாரணம் அளிக்கக் கோரி யும் வழக்குத் தாக்கல் செய்த மாணவனையும், அவனது பெற்றோரையும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு வின் தலைவர் பேராசிரியர் அர்ச்சுனா அலுவிகார நேரில் அழைத்துப் பேசும் அளவுக்கு, பேரம் பேசி விட்டுக்கொடுக்கும் அளவுக்கு அரச தரப்பு பலவீ னம் அடைந்திருக்கிறது!

வழக்கின் தீர்ப்பு அரசாங்கத் துக்குப் பாதகமாக அமையும் என்பதை அரசு புரிந்து கொண்டிருக்கிறது. வழக்கு வாபஸ் பெறப்படாமல் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டால், உயர்கல் வித் துறையில் பெரு நெருக் கடிகள் உருவாகும் என்பதை யும் அரசு உணர்கிறது. அத னாலேயே வழக்கை வாபஸ் பெறச் செய்து நீதிமன்றத் துக்கு வெளியே ஒரு சமரசத் துக்கு வந்துவிட அரசும், பல் கலைக்கழக மானியக் குழுவும் துடியாய்த் துடிக்கின்றன.

தென்னிலங்கையில் நடத் தப்பட்ட பரீட்சையையும், வடக்கு-கிழக்கில் நடைபெற்ற விசேட பரீட்சையையும் ஒன்றா கக் கணிக்குமாறு கோரி தமிழ் மாணவர்கள் சார்பில், அவர் களது பெற்றோர்கள் சார்பில், தமிழ் ஆசிரியர்கள், அதிபர்கள் சார்பில், தமிழ்க் கல்விமான் கள் சார்பில் எத்தனையோ கோரிக்கைகள் பல்கலைக்கழக ஆணைக்குழுவுக்கும், கல்வி அமைச்சுக்கும் விடுக்கப்பட்டன.

இரண்டு பரீட்சைகளையும் வெவ்வேறாகக் கருதுவது தவறு, அநீதியானது. அடிப் படை உரிமைகளை மீறுவது என்றும் எடுத்துக்காட்டப்பட் டது. முந்திய வழக்கொன்றின் தீர்ப்பு அரசுக்கு எதிராக அமைந்த முன்னுதாரணமு கூடச் சுட்டிக்காட்டப்பட்டது

ஆனால் அப்போது அரசு தனது பிழையை உணர வில்லை. இல்லை, இல்லை, உணர்ந்தும் தமிழர்களை ஒதுக்கிவிட நினைத்துத் தனது தவறான முடிவைத் திருத்த மறுத்தது. ஏனைய விடயங் களைப் போலவே இவ்விடயத் திலும் தமிழருடன் நடந்து கொண்டது.

நாடாளுமன்றத்தில் சிங்கள அரசியல்வாதிகள் இந்த விட யத்தை வைத்து இனவாதமும் குதர்க்கவாதமும் நிகழ்த்தி னார்கள். தாங்கள் செய்யும் அடடூழியங்களை நீதித்தேவன் அமைதியாக பார்த்துக் கொண் டிருக்கிறான் என்பதை மறந்து போனார்கள்.

இப்போது அநீதிக்குத் தண் டனை கிடைக்கப்போகின்றது என்பது தெரிந்து அஞ்சுகிறார் கள். நீதிமன்றத்துக்கு வெளியே சமரசம் செய்வதற குப் பேரம் பேசும் அளவுக்குத் தாழ் நிலைக்கு வந்திருக்கி றார்கள்!

அநீதியை யார் செய்யினும் அவர்கள் தண்டிக்கப்படவேண் டியவர்கள். விதைத்த வினைக்கு அறுவடை செய்தே ஆகவேண்டும்.

எனவே வழக்கை தொடர்ந்த மாணவன் இங்கே விட்டுக் கொடுக்கவோ சில சலுகை களைப் பெற்று வழக்கை வாபஸ் பெறவோ கூடாது; அவ் வாறு செய்ய முடியாது. இது அவர் தனிப்பட்ட முறையில் தொடர்ந்த வழக்கல்ல. தமிழர் மாணவர்கள் சார்பில் நீதி கோரி முன்வைக்கப்பட்ட வழக்கு. பல கல்விமான்கள், சட்ட அறிஞர்களின் முயற்சி யாலும் பல பெற்றோர்களின் நிதி உதவி கொண்டும் தொட ரப்பட்ட வழக்கு.

அரசாங்கம் தமிழர்களின் அடிப்படை உரிமைகளை எவ் வாறு தட்டிப்பறிக்கிறது என் பதை உலகத்துக்கு, எடுத்துக் காட்ட தமிழ் மக்கள் சார்பில் விடுக்கப்பட்ட சவால். இதில் நீதி சார்ந்து நிற்கும் தமிழர் களே வெல்லவேண்டும். ஒரு சிலர் தமது சுயநலம் கருதி சமரசத்துக்குப் போனால் உல கம் எங்களைப் பழிக்கும். மீண் டும் ஒரு முறை தமிழர்கள் ஏமாந்த சோணகிரிகள் ஆகி விடுவர். கவனம்!

---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

# ரெலோவை வளர்த்தது!

ஐந்து அமைப்புகளுக்கு இந்தியா ஆயுதம் வழங்கியது.

இதில் எந்த அமைப்பை தனது கைக்குள் வைத்திருக்க வேண்டும் என்பது இந்தியாவுக் குத் தெரியும்.

''ரெலோ'' அமைப்புக்கு கூடுதல் பயிற்சி, ஆயுதங்கள், பணவசதிகள் செய்து கொடுக்கப் பட்டன.

விடுதலைப் புலிகளுக்கு கடைசிக் கட் டத்தில்தான் அதுவும் இருநூறு பேருக்குத் தான் பயிற்சியளிக்கப்பட்டது

ரெலோ இயக்கத்துக்கு சித்தாந்தப் பார்வை இல்லை; இலட்சிய நோக்கு இல்லை இந்தியா சொன்னபடி செயலாற்றக்கூடிய ஒரே அமைப்பு ரெலோதான் இதனை அதன் தலைவர் ஸ்ரீ சபாரத்தினமே பகிரங்கமாகச் சொன்னார்

''நாங்கள் இந்தியாவின் சிப்பாய்கள்; படைவீரர்கள் இந்தியா சொன்னபடி செய் வோம். இந்தியா எப்போது ஆயுதங்களை கையளிக்கச் சொல்கிறதோ, அப்போது கைய ளிப்போம்'' — என்று ஸ்ரீ சபாரத்தினம் பகி ரங்கமாகச் சொன்னார். பத்திரிகைகளில் எல் லாம் அது முதன்மைப் படுத்தப்பட்டு வெளி யிடப்பட்டது.

இவ்வாறாக இந்தியா விடுதலை அமைப் புக்களை ஜெயவர்த்தனா அரசுக்கு எதிராகப் பயன்படுத்தியது.

## இந்திய அழுத்தங்களுக்கு மத்தியில் பிரபா

பல வருடங்களை நான் தலைவர் பிரபாக ரனுடன் இந்தியாவில் கழித்தேன். தலைவர் பிரபாகரன் இந்தியாவின் அழுத்தங்களுக்குள் எதிர்ப்பு அலைகளுக்குள், பல முனைகளுக் குள் எப்படி சிக்கித் தவித்தார் என்பதை நான் அறிவேன். நான் அப்போது அவருடன் அருகில் இருந்தேன்.

நாங்கள் இந்தியாவில் ஒரு வீட்டில் தூங் கிக் கொண்டிருக்கவில்லை. டெல்லி, பெங்க ளுர், சென்னை எனப் பல இடங்களில் கூட்டங் கள், இரகசிய மாநாடுகள் என்று எத்த னையோ நடந்தன.

அப்போதெல்லாம் எங்கள் மீது போடப் பட்ட அழுத்தங்களைக் கொஞ்சம் கொஞ்ச மாகத்தான் எமது மக்களுக்குச் சொல்ல வேண் டும். அந்த நேரம் அதனைக் கூறியிருந்தால் எமமை விரோதிகள் என்று பட்டம் சூட்டி யிருப்பார்கள்.

தலைவர் பிரபாகரன் பல தடவைகள் சிறைப் பிடிக்கப்பட்டார்; சிறையில் இருந் தார்; வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்; உண்ணாவிரதம் இருந்தார்; நான் நாடு கடத் தப்பட்டேன், எனது வீட்டைக் குண்டுவைத் துத்தகர்த்தனர். எங்களை சும்மாவா விட்டார்கள்?.

## இந்தியாவின் பயங்கரவாத ராஜதந்திரம்

இந்தியா கைக்கொள்ளும் ராஜதந்திரம் மென்முறையானது அல்ல வன்முறையானது அவர்களின் ராஜதந்திரத்தை Agg essive Diplomacy என்பதை விட Diplomatic Terrorisim என்றுதான் கூறவேண்டும்.

நடுநிசியில் வீடுகளில் வந்து தட்டுவார்கள். பல ஜீப்புகளில் பொலீஸ், இரகசியப் பொலீஸ் புலனாய்வுத்துறை என்று பலதுறை அதிகாரி கள் வந்திறங்கி உடன் டெல்லிக்கு அழைப் பார்கள். அப்படியே வாகனத்தில் அழைத்துச் சென்று விமானத்தில் ஏற்றி டெல்லிக்கு அனுப்புவார்கள். அங்கு ஹோட்டல்களில், வீடுகளில் பூட்டி வைத்து இரகசியப் பேச்சு என்பார்கள். இதுதானா ராஜதந்திரம்?

எத்தனை பயமுறுத்தல்கள்? இவை எல்லா வற்றுக்கும் ஈடுகொடுத்து தலை நிமிர்ந்து நின்று. எங்கள் கொள்கையில் உறுதியாக நின்று. பேசினோம்.

இந்திய அரசுக்கு தனது நலன் தான் முக் கியம் என்றால், எமக்கு எமது மக்களின் நலன் தான் முக்கியம்.

## இந்தியத் தூதர் டிக்ஸிற்றின் மிரட்டல்!

டிக்ஸிற்றைப் பற்றி உங்களுக்குத் தெரி யாது. அவருடன் பல வருடங்களாக நாங் கள் உழைப்பட்டோம்; விவாதித்தோம்; சண்டை பிடித்தோம். அவர் பயமுறுத்தினார்.

பெங்களூரில் ஒரு பேச்சுவார்த்தை. நானும் தலைவர் பிரபாகரனும் போயிருந் தோம். அப்போது ஒரு திட்டத்தை அவர் கொண்டுவந்தார். தமிழருக்கு, சிங்களவருக்கு முஸ்லிம்களுக்கு என கிழக்கு மாகாணத்தை மூன்றாகப் பிரிக்கும் திட்டம் அது.

அந்தத் திட்டத்தை தலைவர் பிரபா கரனை ஏற்கும்படி அவர் கூறினார்.

தலைவர் அத்திட்டத்தை நிராகரித்தார். தமிழர் தாயகத்தை பல துண்டுகளாகக் கூறு போடும் திட்டத்தை எப்படி ஏற்பது என்று தலைவர் கேட்டார்.

அப்போது ''இதை நீங்கள் ஏற்கவேண் டும். இல்லையேல் சிங்கள இராணுவம் யாழ். குடாநாட்டுக்குள் பெரிய படையெடுப்பை மேற்கொள்ளும். 10 ஆயிரம் தமிழர் வரை கொன்று குவிப்பதற்கு அவர்கள் திட்டமிட்டி ருக்கிறார்கள் இங்கு மக்கள் சாகப்போகி றார்கள் உங்கள் வரட்டுச் சித்தாந்தம், வரட் டுக் கொள்கைகளை கைவிடுங்கள்'' —என்று டிக்ஸிற் கூறினார்.

அதற்குத் தலைவர், ''சிங்கள இராணு வம் அப்படிச் செய்வதாயிருந்தால்— 10 ஆயி ரம் மக்களைக் கொல்வதாக இருந்தால் — இந்தியா அதற்கு என்ன செய்யப்போகிறது? உங்களால் தடுக்க முடியாவிட்டால் எங்க ளுக்கு ஆயுதங்களைத் தாருங்கள். அழிவை நாங்கள் தடுத்து நிறுத்துகிறோம்'' — என்று பதிலளித்தார்.

அந்தப் பதில் அவருக்குப் பிடிக்கவில்லை. ''பிரபாகரனுக்கு தமிழ் மக்களில் அக் கறை இல்லை அவர் சுயநலவாதி; ஆபத்தான ஆள், தனது சுயநலத்துக்காக ஓர் இனப் படு கொலைக்கு இடமளிக்கிறார்'' — என்று டிக்ஸிற் பகிரங்கமாகக் கூறினார்.

இப்படி ஒவ்வொரு கட்டத்திலும் எம் மீது களங்கம் கற்பிக்கப்பட்டது.

## தலைவர் பிரபாகரனின் பொறுமை

பலாலியில் பேச்சு நடத்த நான்கு தடவை கள் டிக்ஸிற் வந்தார் தலைவருடன் நானும் சென்றேன்.

முதலில் ''இடைக்கால அரசு'' என்றார். பின்னர் ''நிர்வாக சபை'' என்றார். அது பின் ''ஆலோசனை சபை'' ஆகியது.

அப்போது ஒரு கட்டத்தில் ''நிர்வாக சபை என்றால் அதன் செயற்பாடு, அதிகாரங் கள் என்ன?'' — என்று நான் கேட்டேன். அவருக்குக் கோபம் வந்துவிட்டது 'போய் ஜே. ஆருடன் கதையும்'' என்றார். இதுதானா ராஜதந்திரம்?

இப்படிச் சில தடவைகளில் இவர்களின் பேச்சு எனக்கு சினத்தை ஊட்டும். அப்போது அருகிலிருக்கும் தலைவர் பிரபாகரன் எனது தொடையில் நுள்ளுவார் நிதானமாக. பொறுமையாகப் போகும்படி எனக்குப் புத்தி கூறுவார்.

## கிட்டுவைச் சந்திக்க மதில் பாய்ந்தேன்

இந்திய இராணுவம் இலங்கையில் ஒருவரு டம் யுத்தம் நடத்தி சிக்குப்பட்டிருந்த வேளை யில் இரகசியமாக புலிகளுடன் பேச இந்தியா முயன்றது.

சென்னையில் தளபதி கிட்டுவுடன் பேச்சு நடக்கிறது.

நான் வடமராட்சியில் ஆறு மாதம் கஷ் டப்பட்டு ஒளித்துத் திரிந்து, கடைசியாக இந் தியாவில் பெங்களூரில் போய் ஒளித்து நிற்கிறேன்.

''இந்திய அரசுடன் பேச்சு நடக்கிறது. உங்களை நான் சந்திக்க வேண்டும்'' என்று கிட்டு எனக்கு அறிவித்தார்.

பெங்களூரிலிருந்து சென்னைக்கு இரவில் தான் வரவேண்டும். பகலில் வரமுடியாது.

கிட்டு தடுப்புக்காவலில் இருக்கிறார். அவ ருடன் சில உதவியாளர்கள் நாலாபுறமும் ஆயுதம் ஏந்திய பொலீஸார். நான் முன்பக்கம் வரமுடியாது. நடுச்சாமத்தில், வீட்டுப் பின்பக் கமாக வந்திறங்கி நாலைந்து சுவர்கள் பாய்ந்து வருகிறேன்.

நான் வருவதற்கு வசதியாக கிட்டு பொலீ ஸாருக்கு பராக்குக் காட்டுகிறார். வீட்டு முன் பக்கத்தில் டெக்கில் படம் போட்டுக் காட்டு கிறார். நான் அந்த நேரம் பார்த்து, பின்சுவர் பாய்ந்து வீட்டுக்குள் போய் கிட்டுவுடன் பேசினேன்.

## ஜொனிக்கு நடந்ததே கிட்டுவுக்கு

இரகசியப் பேச்சு நடந்தது. யுத்தம் தொடர்வது இந்தியாவுக்கு அவமானம் என் றார்கள். நாம் பேச்சுவார்த்தைக்குத் தயார்; யுத்த நிறுத்தமும் செய்யலாம் என்றோம்.

ஆயுதங்களில் ஒரு பகுதியை ஒப்படைக்க வேண்டும் என்றனர். நாம் சம்மதித்தோம். ஆனால் மக்களுக்கு யுத்தத்தால் ஏற்பட்ட நஷ்டத்துக்கு நூறுகோடி ரூபாவும், இயக்கத் துக்கு ஐம்பது கோடி ரூபாவும் தரவேண்டும் என்றோம். அதற்குச் சம்மதித்தார்கள்.

ஆனால் முதலில் யார் எதைக் கொடுப் பது என்பதில் சிக்கல் வந்தது முதலில்பணத் தைத் தாருங்கள், பிறகு ஆயுதங்களை ஒப் படைக்கலாம் என்றார் தலைவர் பிரபா. நாங்கள் ஆயுதங்களைத் தந்துவிட்டால் ''நீங்கள் சரணாகதி அடைந்து விட்டீர்கள். நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம்'' — என்று பிரச்சாரம் செய்வீர்கள் என்றார் பிரபா.

பிரதமர் அலுவலகம், வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, உள்நாட்டு பாதுகாப்புத் துறை என இந்தியாவின், பல் வேறு அலகுகள் முரண்பட்ட நிலையில் எமது பிரச்சினைகளை அணுகுகின்றன.

சென்னைப் பேச்சுகள் குறித்து அறிக்கை தயாரித்தோம். அதனை பிரபாகரனிடம் ஒப்படைப்பதற்காக முல்லைத்தீவிற்கு சமா தானத் தூதராக தளபதி ஜொனி சென் றார் அவரை இந்தியப் படை சுட்டுக்கொன் றது. இதுதானா இந்திய ராஜதந்திரம்?

இந்தப் பின்னணியில் கிட்டுக்கு நடந்தது என்ன என்பதை நீங்கள் உணரலாம்.

## சோவியத்தின் கதியே இந்தியாவுக்கும்!

இந்திய சர்வாதிகார அரசு தேசிய இனங் களின் போராட்டங்களை நசுக்குகிறது. அடக்குமுறை தாண்டவமாடுகிறது. இந்தியாவை நாம் விரோதிகளாகப் பார்க்கவில்லை. இந்திய ஆளும் வர்க்கத்தையே

(6 ஆம் பக்கம் பார்க்க)

---

## பாக். டாக்டர்கள்

பாகிஸ்தான் டாக்டர்கள் இருவர் வவுனியா ஆதார வைத்தியசாலையில் கடந்த திங்கள் முதல் கடமை ஏற் றார்கள். (உ-3)

---

## தமிழீழ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் அடிப்படைத் தேசிய அபிலாஷைகள் எதனையும் பூர்த்தி செய்யவில்லை. அத னால் நான் தெரிவுக் குழுவி லிருந்து விலகிக்கொள்கிறேன். எனது கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் தெரிவுக்குழுவிலிருந்து விலகிக் கொள்கிறது. இதனை உங்க ளுக்கு அறியத் தருகின்றேன். — என்று குறிப்பிட்டிருக்கி றார்.

வடக்கு-கிழக்கு மாகாணங் களைத் துண்டிக்க ஐந்து ஆண்டுகளாக ஒரு சூழ்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. இச் சூழ்ச்சியின் வடிவமாகவே சமஷ்டி வருகிறது. ஆகவே கவனமாக இருங்கள் என்று அமைச்சர் தொண்டமான் எழுதியிருக்கிறார்.

அந்தக் கடிதத்தை நாம் விரைவில் பிரசுரிப்போம்.

தெரிவுக்குழு தோல்வியில் முடிவடைந்தாலும் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம் தோல்வியில் முடிவடையப் போவதில்லை உலகம் வியக்கும் சாதனை களைத் தமிழீழ மக்கள் படைத்துத்தான ஆவார்கள் என்று அவர் கடிதத்தின் இறு தியில் குறிப்பிட்டுள்ளார்.

வெற்றி எமதே என்ற அடிப்படையில் துணிவுடனும் உறுதியுடனும் எமது மக்கள் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து. உணர்த்தி அவர் கடிதம் எழுதியுள்ளார். அதனை உணர்ந்து நாம் போராட வேண்டும்

சிங்கள அரசின் தந்திரோ பாயங்களுக்கும் இந்திய அர சின் சூழ்ச்சிக்கும் மத்தியில் இந்தப் போராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண் டும் — என்றார். (உ-3-[11)

---

## கலை, இலக்கிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேணல் கிட்டுவுக்கு அஞ்சலி செலுத்தும் கவிதைகளும் பாடப்பட்டன.

பேரணி சேர் பொன். இராமநாதன் வீதி வழியாக பல்கலைக்கழகத்தை அடைந் தது அங்கு கைலாசபதி கலை அரங்கில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. அகில இலங் கைக் கம்பன் கழக அமைப் பாளர் திரு. இ. ஜெயராஜ் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

கலாநிதி சோ. கிருஷ்ண ராசா, செல்வி மாதவி, திரு. பொன். சுந்தரலிங்கம், கலைப்பேரரசு ஏ. ரி. பொன் னுத்துரை, திரு. க. தணிகா சலம், கலாகேசரி ஆ. தம்பித் துரை, அது. வை. நாகரா ஜன், இயல் இசை வாரிதி ந. வீரமணி ஐயர், விரிவுரை யாளர் த. சிதம்பரநாதன் உட்பட மற்றும் பத்திரிகை யாளர்களும் அஞ்சலி உரை களும் கவிதாஞ்சலியும் நிகழ்த் தினர்.

கூட்ட ஆரம்பத்தில் கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத் துரை, கலைஞர் எஸ். ஆர் ஞானசுந்தரம் ஆகியோர் ஈகைச்சுடரை ஏற்றி வைத்த னர்.

கலாநிதி அன்ரன் பாலசிங் கத்தின் ஆய்வுரையைத் தொடர்ந்து நாத அஞ்சலி, கவித் நிகழ்வு ஆகியன இடம்பெற்றன

அஞ்சலி உரைகளின் முடி வில் தலைவர் திரு, இ. ஜெய ராஜ் பின்வருமாறு செய் தியை விடுத்தார்

இந்தியாவே! நீ உதவி செய் வாய் என நாம் நம்பியிருந்த காலமுண்டு. ஆனால் நீ துரோ கம் இழைத்து வருகிறாய் நீ உதவி செய்யாவிடின் பர வாயில்லை. உபத்திரம் செய் யாமல் இருந்தால் போதும். நீ எங்கள் விடயத்தில் தலை யிடாமல் இரு. நாங்கள் எங் கள் சுதந்திரத்திற்காகப் போராடுவோம். போராடி வெல்வோம். இதுவே இந்த மண்ணின் கலை, இலக்கிய, பத்திரிகையாளர்கள் இன் றைய இந்த நிகழ்வின் மூலம் உனக்குத் தெரிவிக்கும் செய்தி — என்றார்

அஞ்சலிக் கூட்டத்துக்கு வந் திருந்த கலைஞர்கள், இலக் கிய கர்த்தாக்கள், இலக்கிய ஆர்வலர்கள், பத்திரிகையா ளர்களால் கைலாசபதி அரங்கு நிரம்பி வழிந்தது.

(அ-3-5-111-15-143)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பரமு சிதம்பரப்பிள்ளை

பரமு சிதம்பரப்பிள்ளை கொழும்பில் காலமானார். அன்னார் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நாகம்மாவின் அன்புக் கணவரும், பிரபல வர்த்தகர் ஆ. ச. ஆறுமுகம் தம்பதிகளின் சம்பந்தியும், நேசேந்திரம், சாரதாமணி ஆகியோரின் தந்தையாரும், பாலேந்திரன், வசுந்திராதேவி ஆகியோரின் மாமனாரும், அருள்மொழி, அருட்செல்வி, சசிவர்ணா, காயத்திரி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் புதன்கிழமை (27-1-1993) இல் கொழும்பில் நடைபெற்றன.

தகவல்:
திருமதி ந. இராசமலர்
65/2, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
[24250]

## வேலுப்பிள்ளை நவரத்தினம்

(இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட்

வேலுப்பிள்ளை நவரத்தினம் 27-01-93இல் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், தவமணிதேவி, சண்முகநாதன் (விசுவமடு), குணமணிதேவி லிகிதர், யாழ் மாநகரசபை), சற்குணநாதன் (கிராம சேவையாளர், கிண்ணியா), வசந்தாதேவி (ஆசிரியை, மட்டுவில் ம. வித்தியாலயம்), பாக்கியநாதன் (விஞ்ஞான ஆலோசகர், சாவகச்சேரி), அற்புதமலர்தேவி, விஜயலட்சுமி அம்பாள் (பரிசோதகர் தொழில் பயிற்சி சபை, அநுராதபுரம்), ஜெகதீஸ்வரி (உதவி விரிவுரையாளர் விவசாயபீடம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சதாசிவம் (ஆசிரியர், நாவற்குழி ம. வி.), செல்வமலர் ஆறுமுகம் மருந்தாளர், வவுனியா), கலாராணி (ஆசிரியை, கிண்ணியா ம. வி.) வைகுந்தநாதன், சிவபாக்கியம், சந்திரசாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று (28-01-93) வியாழக்கிழமை மட்டுவில் தெற்கிலுள்ள அவருடைய இல்லத்தில் 12மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பாக்கியநாதன்
(மகன்)
மட்டுவில் தெற்கு
சாவகச்சேரி.
(-4-46)

## தில்லையம்பலம் பரம்சோதி

(இளைப்பாறிய தொலை தொடர்பு தபால்சேவை நிர்வாக உத்தியோகத்தர்)

சித்தன்கேணியை பிறப்பிடமாகக் கொண்டவரும், ஐயனார் கோவிலடி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்டவருமான காலஞ்சென்ற தில்லையம்பலம் தம்பதிகளின் மகன் பரம்சோதி காலமானார்.

இவர் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், தில்லைநாதன் (முன்னாள் முகாமையாளர், ஹற்றன் தேசிய வங்கி - மன்னார், தற்போதைய திட்ட அலுவலர் - தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் - தாவடி), தேவநாதன் (பொறியியலாளர், லண்டன்), அவர்களின் அன்புத் தகப்பனாரும், பத்மினி, லதா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆர்த்திகா, அருச்சுனா, அமிர்தா, கண்ணன் (லண்டன்) ஆகியோரின் பேரனும், செல்லத்துரை, காலஞ்சென்ற அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (சிங்கப்பூர்), மார்க்கண்டு (சிங்கப்பூர்), திருமதி வேலாயுதம் பொன்னம்மா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 2 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. தில்லைநாதன்
(மகன்)
43, ராதா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்
(24248)

## இராமலிங்கம் மாணிக்கம்

(பிரபல வர்த்தகர்)

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இராமலிங்கம் மாணிக்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகலிங்கம், காலஞ்சென்ற சிவசுந்தரம், காலஞ்சென்ற கனகசுந்தரம் (இளைப்பாறிய அதிபர்), தம்பிஐயா, காலஞ்சென்ற திருமதி சிவகுரு சிவக்கொழுந்து ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற மணிவாசகம், தவமணி, கமலேஸ்வரி (ஆசிரியை யா / மண்டைதீவு ம. வி.), நடேசலிங்கம் (பட்டயக் கணக்காளர், விஜயலக்ஷ்மி, வசந்தா, கனகராசா (முன்னாள் எழுதுவினைஞர், இலங்கை வங்கி), சுந்தரராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுலோசனாதேவி, சிவகுருநாதன் (பிரபல வர்த்தகர்), கனகராசா (மாவட்ட நீதிமன்று, யாழ்ப்பாணம்), எலிமா, பூலோகநாதன், சிவானந்தன், (பொறியியலாளர்), செல்வமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், நந்தினி, பாலமுருகன், சுதர்சன், சுபாசினி, மாலா, யோகான், ரஜிதா, விஷ்ணுகா, வினோதன், நவீனன், வினிதா, சுகனியா, சுஜாகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (27-01-1993) பி. ப. 4 மணிக்கு உரும்பராய் கிருஷ்ணசாமி அவர்களின் முந்திரிகைத் தோட்டம்) இல்லத்தில் நடைபெற்று உரும்பராய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
ந. சிவகுருநாதன்
சி. கனகராசா
(மருமக்கள்)
முந்திரிகைத் தோட்டம்,
கோப்பாய் றோட்,
உரும்பராய்.
(24247)

## சோவியத்தின்..

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிரியாகப் பார்க்கிறோம் பாகிஸ்தான் - இந்திய வெகுஜனங்கள் எமது நண்பர்கள்; சகோதரர்கள் அவர்களும் எம் நிலையில் தான் — அடக்குமுறையின் கீழ்தான் — உள்ளனர்.

பஞ்சாபில், காஷ்மீரில், அஸாமில் எல்லாம் இப்படித்தான் அடக்குமுறை நடக்கிறது அவர்களும் கிளர்ந்தெழுந்துள்ளனர். ஒரு நாள் ஆளும் வர்க்கத்தை அவர்கள் தூக்கி எறிவர்; அங்கே புரட்சி வெடிக்கும்.

சோவியத் சாம்ராஜ்யம் எப்படி துண்டுதுண்டானதோ அதே நிலை இந்தியாவிலும் ஏற்படும். அது பல துண்டுகளாகப் பிளவுபடும் — என்றார்.

## சமஷ்டி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்ட முயற்சிக்கிறது.

பயனற்ற இந்த சமஷ்டியை பிரேமதாஸா முன்வைப்பதன் பின்னணி என்ன?

அவரின் சார்பில் ஆங்கில வார இதழ்களில் — குறிப்பாக 'ஒப்சேவர்" பத்திரிகைகளில் — வெளியாகும் கட்டுரைகள் அவரின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகின்றன

வெறும் இராணுவ அணுகுமுறையால் புலிகளை இனி வெல்ல முடியாது என்பதை அக்கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன.

ஆகவே, அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை — ஏதோ தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளும் அளவில் தீர்வுத் திட்டம் ஒன்றை — முன்வைக்க வேண்டும். அப்படித் தீர்வுத் திட்டத்தை முன்வைத்து தமிழ் மக்களைக் குழப்ப வேண்டும். அதன் பின் இராணுவ நடவடிக்கையைத் தீவிரப்படுத்த வேண்டும். அப்போது தமிழ் மக்கள் மத்தியில் புலிகள் மீது பெரும் அழுத்தம் வரும். புலிகளை அரசியலில் அந்நியப் படுத்தி இராணுவ ரீதியாக அழிக்க இது தான் நல்லமுறை — இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா சொல்லச் சொல்ல அந்த ஆங்கிலப் பத்திரிகையாளர் எழுதுகிறார்.

இது தான் நடக்கப் போகிறது. இதன் பின்னர் தான் இராணுவ நடவடிக்கைகள் தீவிரபபடுத்தப்படலாம்.

### தெரிவுக்குழுவின் சமஷ்டி யோசனை

தெரிவுக்குழு கொண்டு வரும் சமஷ்டி யோசனை — ஒவ்வொரு மாகாணத்துக்கும் சமஷ்டி — என்பது ஏற்கனவே எமக்குத் தெரிந்த ஒன்று தான்

வடக்குக்கு தனியாக, கிழக்குக்குத் தனியாக சமஷ்டி. அது மட்டுமல்ல ஒன்பது மாகாணங்களுக்கும் தனித் தனி சமஷ்டி, இதில் எட்டு மாகாணங்கள் சிங்களவருக்குப் போகும் எஞ்சிய ஒன்று தான் தமிழருக்கு வரும் என்று வைத்துக் கொள்வோம்.

அப்படியானால் நாங்கள் நாற்பது ஆண்டு காலமாகப் போராடி சிங்களவருக்கு சமஷ்டி அரசு பெற்றுக் கொடுக்கிறோம். அப்படியா?

சிங்களவர் சமஷ்டி கேட்கவில்லை அவர்கள் நாடாளுமன்ற அரசியலையே நடத்த முடியாது இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏன் எட்டு மாகாணங்களிலும் சமஷ்டி கொடுக்கிறீர்கள்?.

சமஷ்டி என்றால் எத்தனை வடிவங்கள். பரிமாணங்கள் இருக்கின்றன சமஷ்டி என்ற பெயரில் சர்வாதிகார ஆட்சி எத்தனை இடங்களில் நடக்கின்றது. உதாரணத்துக்கு இந்தியா.

இந்தியாவில் சமஷ்டி என்ற பெயரில் சர்வாதிகாரம் தான் நடக்கிறது. இந்திய மத்திய அரசிடம் ஏகப்பட்ட அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன மத்திய அரசு எப்போது நினைத்தாலும் மாநில அரசுகளைக் கலைக்க முடியும். இது என்ன சமஷ்டி?

இந்தப் பாணியில்தான் இங்கு சமஷ்டி வருகிறது.

அப்படியான சமஷ்டியை [illegible] என்ன செய்கின்றோம் என்று [illegible] ளது. — என்றார்.

(உ-3-5-111)

A/L முடிவுகளுக்காகக் காத்திருந்தவர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

Computer Programming
IN
Basic Language
4 MONTHS

வகுப்புகள் ஆரம்பம்
வார நாள் : 01 — 02 — 93
வார இறுதி : 06 — 02 — 93

Lectures By:
S. P. SIVAPATHASUNDARAM
M I;D.P.M. (Lond)

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புக்கள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
★ கட்டணம் மாதம் ரூ 400/ மட்டுமே.

I.A.B., Lotus 1 2-3, Shorthand & Typing
நடைபெறுகின்றன.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers I· Computer Education)
16, 3rd Cross Street, JAFFNA.
[சி/4302]

# மரண அறிவித்தல்கள்

## சபாரட்ணம் முத்தையா

காரைநகர் மாப்பாணவூரியைச் சேர்ந்த சபாரட்ணம் முத்தையா அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார் அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், வாசுகி, யாசோதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சபாரட்னம் கந்தசாமி, திருமதி சிவஞானம் விசுவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ந. பரராசசேகரம் ந. சிவபாதம் (மக்கள் வங்கி, யாழ்ப்பாணம், ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (28-01-93) பிற்பகல் 2 00 மணியளவில் அவரின் சகோதரர் சபாரட்ணம் கந்தசாமியின் வட்டுக்கோட்டை சங்கரத்தை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. கந்தசாமி
(சகோதரர்)
மே/பா இரட்ணசிங்கம்,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.
(24702)

## சூசைப்பிள்ளை சுவாம்பிள்ளை

அச்சுவேலியை பிறப்பிடமாகக் கொண்ட சூசைப்பிள்ளை சுவாம்பிள்ளை (புறோக்கர் காலமாகிவிட்டார்

இவர் காலஞ்சென்ற ராசத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சீமாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை, அருளானந்தம் ஆகியோரினதும் ஜேம்ஸ் மரியம்மா, இராசையா லூர்த்து ஆகியோரினதும் அன்புச் சகோதரரும், FR. S. J. இமானுவல் (புனித சவேரியார் குருக்கள் மட அதிபர்) அவர்களின் சிறிய தந்தையாரும், பொன்ராசா கனடா), பொன்ராணி, சூரி ஜர்மனி, இந்திராணி புஷ்பன் (கனடா), ஆனந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், புஷ்பா, ஜெயம், பற்றிமா, கிறிஸ்டி, நிலாவக்சி ஆகியோரின் அன்பு மாமனாரும், லொயிற்றினி, றஜீவ், நிரோஜன், தயாள், மிலானி, டிலானி, ஜெனிற்றா, சுவிற்றா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கிறிஸ்டி லோறன்ஸ்
74 கண்டிறோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம்
[24704]

## திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி

உடும்பிராய் வடக்கு கற்பகப்பிள்ளையார் கோவில் வீதியைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி இறைவனடி சேர்ந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னையா சின்னத்தம்பி (மட்டுவில் தெற்கு) யின் மனைவியும், கனகாம்பிகை (சுவிஸ்), கணேசு (சேவைக்கால ஆலோசகர் - வர்த்தகம் - மருதனார்மடம் கோட்டம்), இராஜதுரை (லிகிதர், சுன்னாகம் பிரதேசசபை), சுந்தரலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், புஸ்பநாதன் (சுவிஸ்), புஸ்பவதி, பத்மராணி, ஆனந்தகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுவிஸில் உள்ளவர்களான சுகந்தினி, சாந்தினி, சசிதரன், சிறிதரன், பரணீதரன், ஈழவேணி, தாரணி, பிரியலாதன், காயத்திரி, பிரவீணா மற்றும் பிரியதர்சன், பிரதீபன், சர்மிளா, தபோசினி, வாசுகி, சுஜீவன், மயூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (28-1-93) பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் இருளன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல் :
கணேசு,
இராஜதுரை.
(பிள்ளைகள்)
கற்பகப்பிள்ளையார் கோவில் வீதி,
உரும்பிராய் வடக்கு.
(24703)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292ஆம் இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org